# வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்

## தரம் - 5

## பயிற்சி வினாத்தாள் – 11


- தயாரிப்பு : திரு.ம.முரளிதரன் (ஆசிரிய ஆலோசகர்)
- வழிப்படுத்தல் : திரு.இ.ரவிச்செல்வன் ( உதவிக்கல்விப்பணிப்பாளர்)
(வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு)


**11**

**வினாத்தாள் - 2**

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

கட்டெண்: ..........................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன். | .................... பெயர் .................... ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (....................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | .................... பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன். | .................... பெயர் .................... ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன் | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

1. **கீழ்வரும் பந்தியை கவனமாக வாசிக்குக?**

விடியற்காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவெனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத் தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர். இயற்கை அன்னையின் படைப்பில் அனைத்தும் அற்புதமே. உலகிலுள்ள உயிரினங்களுக்கு உவகை அளிக்கும் காலைக் காட்சி மனதிற்கு இனிமையானது.

பந்தியைத் துணையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1) பந்தியிலுள்ள இரட்டைக் கிளவிச் சொல் ஒன்றை எழுதுக?

.................................................................................................................................

2) உயர்திணை பன்மைப் பலர்பாற் சொல் ஒன்றை எழுதுக?

.................................................................................................................................

3) பூமியிலுள்ள, மகிழ்ச்சி ஆகிய சொற்களுக்குரிய ஒத்த சொற்களை எழுதுக?

.................................................................................................................................

4) அதிகாலை என்ற சொல்லைக் குறிக்க பந்தியில் பயன்படுத்தப்பட்ட சொல் யாது?

.................................................................................................................................

5) மனதிற்கினிமையானது என்ற சொல்லைப் பிரித்தெழுதுக?

.................................................................................................................................

2. **அடைப்பிற்குள் உள்ள சொற்களில் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க**

1) பாடசாலையின் முதலாவது மணி ........................................ சில நிமிடங்களின் முன்னர் கேட்டது. *(ஒலி, ஒழி, ஒளி)*

2) இந்தப் பூமியைச் சுற்றி ........................................ மண்டலம் உள்ளது. *(வலி, வழி, வளி)*

3. **கீழ்வரும் சொற்களுக்கான எதிர்ப்பாற் சொற்களை எழுதுக?**

1) பேரரசு :................................... 2) பாக்கியவான் :...................................

4. **பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.**

1) மாமா இளனி அருந்தினார்.

.................................................................................................................................

2) வெத்திலை வாங்கினேன்.

.................................................................................................................................

5. **கொடுக்கப்பட்ட சொற்களில் கீழ்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**
   1) அஃறிணைப் பன்மைப் படர்க்கை பெயர்ச் சொல் எது? (வீடு, கற்கள், சிறுவர்கள்)
   2) உயர்திணை ஆண் பால் படர்க்கை ஒருமைப் பெயர்ச் சொல் (நாம், நான், மாமா)
   3) தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் (நாம், நான, சிறுவர்கள்)

6. **கீழ்வரும் வாக்கியத்தில் இடைவெளியில் வரவேண்டிய எழுத்துக்களை எழுதுக.**
   வைத்தியசாலையில் ......யாளிகள் பருக வெ .... .... ர் கொடுக்கப்பட்டது.

7. **கீழ்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் ஆக்குக.**
   1) என்ற நகரில் / குகன் / வேடர் / கங்கைக் கரையில் / சிருங்கிபேரம் / வாழ்பவன் / என்ற குலத் தலைவன்

   .....................................................................................................................................

   .....................................................................................................................................

8. **சரியான விடையின் கீழ் கோடிடுக**
   1) காலப் பெயரைக் குறிக்கும் சொல்

      (1) பட்டம்   (2) கோடை   (3) இனிமை

   2) இடப் பெயரைக் குறிக்கும் சரியான சொல் எது?


      (1) கார்த்திகை   (2) கருமை   (3) இலங்கை

9. வைத்தியர் இன்றித் தாமே தமது நோய்க்கு செய்து கொள்ளும் மருந்து ........................................

10. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

    1) புறா முட்டையிட்டுக் குஞ்சுகள் ........................................ (பொரித்தது / பொரித்தன)
    2) நான் எனது தங்கையுடன் பாட்டி வீட்டை நோக்கிச் ........................ (சென்றேன் / சென்றோம்)

11. **கீழ்வரும் படங்களுக்கான ஆங்கிலப் பெயரில் இடைவெளியில் வரவேண்டிய எழுத்தை தெரிவு செய்க?**



Pap...........w (a / o)



Squir.......el (i / r)

12. **இடைவெளியில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க?**
    1) How many flowers ............................................. there (is/are)
    2) What ................... this?   (are /  is)

13. **கீழ்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக**
    1) பின்னால்   : ........................................................
    2) அம்மாமார்   : ........................................................

14. **கீழ்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக**

1) ஒயா(ட்)ட வ(த்)துர ஓனத?

.............................................................................................................................................

2) கட்ட சோதன்ன


.............................................................................................................................................

**கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக?**

15. 9099 என்ற எண்ணை சொற்களில் எழுதுக?

.............................................................................................................................................

16. 7490 என்ற எண்ணில் பத்தாமிடத்திலுள்ள இலக்கத்தை உரோமன் எண்ணில் எழுதுக? ...............

17.  இவ்வுருவில் வரையக்கூடிய எல்லா சமச்சீர் அச்சுக்களையும் வரைக?

18. அடைப்பிற்குள் காணப்படும் எண்களில் எட்டின் மடங்குகளை எழுதுக?

| |
|---|
| 32, 60, 72, 108, |
| 42, 24, 84, 96 |

.............................................................................................

19. ரூபாய் 12 வீதம் எட்டுப் பேனைகளையும் ரூபாய் 40 வீதம் இரண்டு பயிற்சிக் கொப்பிகளையும் வாங்கிய ஒருவர் கடைக்காரனிடம் ரூபாய் 200ஐ கொடுத்தார் எனில் மீதிப் பணமாக எத்தனை ரூபாய் 2 குற்றிகள் கிடைக்கும்? .............................................................................................

20. தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்கள் ஐந்து பேரின் நிறை 180 kg ஆகும். இவற்றில் ஒருவர் ஏனையவர்களை விட 5kg நிறை கூடியவர் ஏனையவர்கள் யாவரும் சம நிறையுடையவர்கள் எனின் நிறை கூடியவரின் நிறை யாது ? ...............................................................

21. இங்குள்ள ஓரெண்ணிலிருந்து இன்னோர் எண்ணைக் கழிக்க 76 கிடைக்கும் அவ்விரண்டு எண்களையும் தெரிவு செய்து எழுதுக

183, 192
266 , 107


.............................................................................................

22. மனோகர் ஒரு மேலதிக வகுப்பிற்கு வந்து அங்கு 3 மணித்தியாலம் 30 நிமிடங்களைச் செலவிட்ட பின்னர் அங்கிருந்து பி.ப 2.30 இற்குப் புறப்பட்டான்.

1) மனோகர் புறப்பட்டுச் சென்ற நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்திற்கேற்ப எழுதுக.

.............................................................................................................................................

2) மனோகர் வகுப்பிற்கு வந்த நேரம் யாது? .............................................................................

23. 


தரம் 5 மாணவர்களின் செயற்பாடு ஒன்றைச் செய்வதற்காக ஆசிரியரால் குழுக்கள் பிரிக்கப்பட்ட விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

1) A குழுவில் உள்ள மாணவர் எண்ணிக்கை 6 எனின் G குழுவிலுள்ள மாணவர் எண்ணிக்கை யாது?

..............................................................................................................................


2) H குழுவிலுள்ள மாணவர் எண்ணிக்கை யாது?

..............................................................................................................................

3) வகுப்பிலுள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை யாது?

..............................................................................................................................

24. **கீழ்வரும் வரைபை அவதானித்து விடை தருக?**




**தரம் 5 மாணவர்கள் விரும்பும் உணவுகள் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளது.**

1) இவ் வகுப்பில் இருபது மாணவர்கள் உள்ளனர் எனில் இட்லியை விரும்பும் மாணவர் தொகையை வரைபில் வரைந்து காட்டுக.

2) இட்லியை விரும்பும் மாணவர்களின் எத்தனை மடங்கு மாணவர்கள் தோசையை விரும்புகின்றனர்.


..............................................................................................................................

25. ஒரு வியாபாரி 100 மாம்பழங்களை ரூபாய் 20 வீதம் கொள்வனவு செய்தார். அவற்றில் 10 பழங்கள் பழுதடைந்து விட்டன. ஏனையவற்றில் 40 மாம்பழங்களை ரூபாய் 25 வீதம் விற்றார். மீதி மாம்பழங்களை ரூபாய் 30 வீதம் விற்றார் ஆயின் அவருக்குக் கிடைத்த இலாபம் எவ்வளவு?

..............................................................................................................................

26.  அருகே காணப்படும் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

.............................................................................................................

27. 


நான்முகி ஒன்று படத்தில் காட்டியவாறு புள்ளிக் கோடு வழியே வெட்டப்பட்டது. வெட்டப்பட்ட பின் நான்முகியின் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?


.............................................................................................................

**கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க**


28. கீழ்வரும் பிராணிகளில் ஊன் உண்ணி அல்லாதது எது?


(1)


(2)


(3)

29. இலங்கைக்கே உரித்தான பிராணி அல்லாதது எது?


(1)


(2)


(3)

30. அதிக சூடான கோள் எது?
(1) புதன் (2) வெள்ளி (3) வியாழன்

31. நாருரு வேரையும் சமாந்தர நரம்பமைப்பும் கொண்டமைந்த தாவரம் அல்லாதது
(1) தென்னை (2) கமுகு (3) கடதாசிப் பூ மரம்

32. வாகன வரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுமிடம் எது?
(1) மாவட்டச்செயலகம் (2) பிரதேச செயலகம் (3) பிரதேசசபை

33. ஓர்க்கிட் பூவின் இதழ்களின் எண்ணிக்கை யாது?
(1) 6 (2) 5 (3) பல

34. நான் எனது வீட்டிற்கு ஒளியாவேன் என்பது உள்ளத்தை தளர்த்தும் செயற்பாடுகளில் எதனைக் குறிக்கும்?
(1) பிரார்த்தனை (2) மகிழ்வு (3) மனவுறுதி

35. நீர் உள்ள கண்ணாடிக் குவளை ஒன்றில் பனிக்கட்டி ஒன்றை இடும் போது யாது நிகழும்?



(1) பனிக்கட்டி தாழும்

(2) கண்ணாடிக் குவளையின் வெளியே நீர்த்துளிகள் தோன்றும்

(3) கண்ணாடிக் குவளையிலுள்ள நீர் குறைவடையும்

36. இலுப்பை, கொன்றை ஆகியன பூக்கும் மாதம் எது?

(1) வைகாசி (2) சித்திரை (3) ஆவணி

37. ஔடதம் தயாரிக்கப் பயன்படும் பூ எது?

(1) வாழைப் பூ (2) தாமரைப் பூ (3) வில்வம் பூ

38. திசைகாட்டி ஒன்றில் பயன்படுத்தப்படும் காந்தவகை எது?

(1) சட்டக் காந்தம் (2) ஊசிமுனைக் காந்தம் (3) பரிவட்டக் காந்தம்

39. கீழ்வருவனவற்றுள் தோற் கருவி அல்லாதது எது?

(1) மிருதங்கம் (2) தபேலா (3) கடம்

40. தாவரத்தின் எப் பகுதியில் செவ்வெறும்புகள் கூடுகட்டும்

(1) தண்டுகள் (2) இலைகளில் (3) வேர்களில்

41. பிராணிகளால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்கு அல்லாதது

(1) பிராணிகள் தாவரப்பகுதிகளை உண்ணுதல்
(2) தாவரங்களின் கிளைகளை முறித்தல்
(3) மகரந்தச் சேர்க்கை இடம்பெறல்

42. எண்ணெய் எடுக்கப்பயன்படும் வித்து அல்லாதது

(1) சூரியகாந்தி (2) ஆமணக்கு (3) பனை

43. வாயால் உணவுண்டு வாயால் கழிவகற்றும் பிராணி யாது?

(1) பூனை (2) அட்டை (3) வெளவால்

44. அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்யத் தேவையானது

(1) நிலக்கரி (2) எரிபொருள் (3) நீர்

45. வரட்சியால் உண்டாகும் பிரச்சினை அல்லாதது

(1) குடிநீர்த் தட்டுப்பாடு
(2) தாவரங்கள் செழிப்பாக இருத்தல்
(3) பயிர்கள் அழிவடைதல்

46. பாரமான பொருள் ஒன்றை மேலே உயர்த்த பொருத்தமான உபகரணம்

(1) சம்மட்டி (2) அலவாங்கு (3) கப்பி

47. கண்பார்வையற்றோர் பயன்படுத்துவது எது?

(1) வெள்ளைப்பிரம்பு (2) செவிப்பன்னி (3) ஊன்றுகோல்

48. கீழ்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?

(1) பாதையின் வலதுபுறத்தால் நடத்தல்
(2) பட்டாசு கொளுத்துதல்
(3) வாகன நெரிசல் உள்ள போது வீதியைக் கடக்காது இருத்தல்

49. கருங்கல் உடைப்பவர் கட்டாயம் அணிந்திருக்க வேண்டியது

(1) கையுறை (2) தலைக்கவசம் (3) சீருடை

50. இரைப்பையழற்சி நோய் உள்ள ஒருவர் உண்ணக் கூடாதது

(1) உடன் உணவுகள் (2) இனிப்பு உணவுகள் (3) கொழுப்பு உணவுகள்

51.



இக்குறியீடு காணப்படும் இடம் அல்லாதது

(1) வைத்தியசாலைக்கு அருகில்
(2) நீதிமன்றத்திற்கு அருகில்
(3) சந்தைக்கு அருகில்

52. நச்சுத்தன்மையற்ற உணவுப்பொருட்கள் கிடைக்க யாது செய்தல் வேண்டும்?

(1) சேதனப்பசளை பயன்படுத்தல்


(2) இரசாயனப்பசளை பயன்படுத்தல்

(3) கிருமிநாசினி தெளித்தல்

53. சட்டக்காந்தம் ஒன்றின் நடுவில் நூலால் கட்டி தொங்கவிடப்படும் போது காந்தத்திலுள்ள S என்ற குறியீடு காட்டும் திசை

(1) கிழக்கு (2) தெற்கு (3) மேற்கு

54. இப்படம் குறிப்பது




(1) கிழக்கு மேற்காக காற்று வீசுவதனை

(2) மேற்கு கிழக்காக காற்று வீசுவதனை

(3) வடக்கு தெற்காக காற்று வீசுவதனை

55. இலங்கையில் 2 மாவட்டங்களைக் கொண்ட மாகாணங்கள் எத்தனை?



(1) 2

(2) 3

(3) 4

56. கீழ்வருவனவற்றுள் எதில் தேசிய சின்னம் காணப்படும்?

(1) தனியார் பேருந்து (2) வாகன இலக்கத் தகடு (3) பயிற்சிக் கொப்பி

57. இலங்கையின் தேசிய மரத்தினது பூவின் நிறம் மற்றும் இதழ்களின் எண்ணிக்கை என்பன முறையே

(1) வெள்ளை, 6 (2) மஞ்சள், 4 (3) வெள்ளை, 4

**பரீட்சையை மையமாகக் கொண்டு கற்பித்தல் இடம்பெறுவதால் மாணவர்களின் விளையாட்டு நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. விளையாட்டில் ஈடுபடுவதனால் கிடைக்கும் பயன்கள் எனும் தலைப்பில் 5 சொற்களுக்குக் குறையாமல் எழுத்துப்பிழைகள் இல்லாத, எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக அமைந்த 3 வாக்கியங்களை எழுதுக.**

1. ..............................................................................................................................

..............................................................................................................................

2. ..............................................................................................................................

..............................................................................................................................

3. ..............................................................................................................................

..............................................................................................................................

# வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்
## தரம் - 5
## பயிற்சி வினாத்தாள் – 11 (விடைகள்)


- தயாரிப்பு திரு.ம.முரளிதரன் (ஆசிரிய ஆலோசகர்)
- வழிப்படுத்தல் திரு.இ.ரவிச்செல்வன் (உதவிக்கல்விப்பணிப்பாளர்)
(வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு)


பகுதி : 01

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 3 | (11) | 2 | (21) | 2 | (31) | 3 |
| (2) | 2 | (12) | 2 | (22) | 3 | (32) | 3 |
| (3) | 2 | (13) | 2 | (23) | 2 | (33) | 2 |
| (4) | 3 | (14) | 3 | (24) | 3 | (34) | 1 |
| (5) | 1 | (15) | 3 | (25) | 1 | (35) | 3 |
| (6) | 1 | (16) | 1 | (26) | 3 | (36) | 1 |
| (7) | 2 | (17) | 3 | (27) | 1 | (37) | 2 |
| (8) | 1 | (18) | 2 | (28) | 2 | (38) | 1 |
| (9) | 3 | (19) | 2 | (29) | 3 | (39) | 3 |
| (10) | 3 | (20) | 1 | (30) | 1 | (40) | 1 |

வினாத்தாள் - 02

| வினா இல | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| (1) | 1. விறு விறு<br>2. மாணவர்கள்<br>3. உலகிலுள்ள<br>4. விடியற்காலை<br>5. வண்ண வண்ண<br>6. மனதிற்கு + இனிமையானது | 01<br>01<br>01<br>01<br>01<br>01 |
| (2) | 1. ஒளி<br>2. வளி | 01<br>01 |
| (3) | 1. பேரரசி<br>2. பாக்கியவதி | 01<br>01 |
| (4) | 1. மாமா இளநீர் அருந்தினார்<br>2. வெற்றிலை வாங்கினேன் | 01<br>01 |
| (5) | 1. கற்கள்<br>2. மாமா<br>3. நாம் | 01<br>01<br>01 |
| (6) | 1. தோ<br>2. நு<br>3. நீ | 01<br>01<br>01 |
| (7) | கங்கைக் கரையில் சிருங்கிபேரம் என்ற நகரில் வாழ்பவர் குகன் என்ற வேடர் குலத்தலைவன் | 01 |
| (8) | 1. கோடை<br>2. இலங்கை | 01<br>01 |
| (9) | கைம்மருந்து | 01 |
| (10) | 1. பொரித்தது<br>2. சென்றேன் | 01<br>01 |

| | | |
|---|---|---|
| (11) | 1. a<br>2. r | 01<br>01 |
| (12) | 1. are<br>2. is | 01<br>01 |
| (13) | 1. மீட்டு பாட்ட<br>2. அம்மை | 01<br>01 |
| (14) | 1. உங்களுக்குத் தண்ணீர் வேண்டுமா?<br>2. வாய் கழுவுங்கள் | 01<br>01 |
| (15) | ஒன்றாயிருந்துத் தோன்றுாரேறோன்பது | 02 |
| (16) | ix | 02 |
| (17) |  | 02 |
| (18) | 24, 32, 72, 96 | 02 |
| (19) | 07 குற்றிகள் | 02 |
| (20) | 40 Kg | 02 |
| (21) | 183, 107 | 02 |
| (22) | 1. 14.30<br>2. மு.ப 11.00 மணி | 02<br>02 |
| (23) | 1. 8 பேர்<br>2. 96 | 02<br>02 |
| (24) | 1. இரண்டுக்கு நேரே கோடு வரைந்து நிழற்றப்பட்டிருத்தல்<br>2. 4 மடங்கு | 02 |
| (25) | ரூபாய் 500.00 | 02 |
| (26) | 01 (ஒன்று) | 02 |
| (27) | 09 விளிம்புகள் | 02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (28) | 3 | (38) | 2 | (48) | 2 |
| (29) | 3 | (39) | 3 | (49) | 2 |
| (30) | 1 | (40) | 2 | (50) | 1 |
| (31) | 3 | (41) | 3 | (51) | 3 |
| (32) | 2 | (42) | 3 | (52) | 1 |
| (33) | 1 | (43) | 3 | (53) | 2 |
| (34) | 2 | (44) | 1 | (54) | 1 |
| (35) | 2 | (45) | 2 | (55) | 3 |
| (36) | 3 | (46) | 3 | (56) | 2 |
| (37) | 3 | (47) | 1 | (57) | 3 |

30x1 = 30 புள்ளிகள்

| | |
|---|---|
| 1 – 14 | = 32 புள்ளிகள் |
| 15 – 27 | = 30 புள்ளிகள் |
| 28 – 57 | = 30 புள்ளிகள் |
| கட்டுரை | = 06 புள்ளி |
| உறுப்பெழுத்து | = 02 புள்ளி |
| **மொத்தம்** | **= 100 புள்ளிகள்** |